**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 561/2022 |
| நாள் | 09.03.2026 |
| வா.சா.1 | வேலுச்சாமி |
| வயது | 67 |
| ஊர் | காளியப்பன்புதுர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

பிரதிவாதி, சந்திரசேகரன் என்பவருக்கு காது கேட்காது என்று சொன்னால், சரியல்ல. என்னிடத்தில் காட்டப்படும் அடையாள அட்டை அரசாங்கத்தால் பிரதிவாதிக்கு காது கேட்காது என்று வழங்கப்பட்ட அடையாள அட்டை என்றால் சரிதான். பிரதிவாதி, சந்திரசேகரனுக்கு காது கேட்காது என்றும், காது கேட்காது என்று அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை பிரதிவாதி தரப்பு சான்றாவனமாக இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். அந்த அடையாள அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பி.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொதுவாக, பிரதிவாதிக்கு ஒருவர் பேசும் சங்கதிகளை அவருக்கென்று தனித்திறனுடைய ஆசிரியர்களை வைத்து விளக்கினால் தான் புரியும் என்று சொன்னால், சரியல்ல. கடந்த 04.12.2017 ம் தேதியன்று வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் எழுதப்பட்ட போது, பிரதிவாதிக்கு உண்டான தனித்திறனுடைய ஆசிரியர்களை வைத்து கிரய உடன்படிக்கையில் உள்ள வாசகங்களை படித்து காட்டியபின்பு, கிரய உடன்படிக்கை ஆவணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதி கிரய உடன்படிக்கை ஆவணத்தை படித்து பார்த்தார். வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றால்,

சரிதான். வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தில் பிரதிவாதியின் தகப்பனாரும், ரமேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். பிரதிவாதியின் தகப்பனாரை அழைத்து விசாரணை செய்தால், வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் பிரதிவாதி தாமாக முன்வந்து எழுதி கொடுத்தாரா அல்லது இல்லையா என்பது தெரியவரும் என்றால், சரிதான். பிரதிவாதிக்கு சரியாக கண்பார்வை தெரியாது என்றால், சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் வீட்டில் வைத்து தான் வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தில் பிரதிவாதியின் கையொப்பம் பெறப்பட்டது. வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் பிரதிவாதியின் தகப்பனார் வீட்டில் வைத்து தான் பிரதிவாதியின் கையொப்பம் பெறப்பட்டது என்ற விவரத்தை எனது சட்டஅறிவிப்பிலும், வழக்குரையிலும் மற்றும் நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். பிரதிவாதியுடன் தாவா சொத்தை பொறுத்து விலை பேசி நிர்ணயம் செய்துவிட்டு நானாக தான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று பிரதிவாதியிடம் கையொப்பம் பெற்றேன். பிரதிவாதி தானாக முன்வந்து தாவா சொத்தை பொறுத்து வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தை என் பெயருக்கு எழுதிகொடுக்கவில்லை என்றும், அவ்வாறான ஆவணத்தை நானாகவே தயார் செய்து கொண்டேன் என்றால், சரியல்ல. வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் 2017ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது என்றும், கிரய ஆவணம் எழுதி பெறுவதற்கு 1 வருட காலம் நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், ஆனால் மேற்படியான கால நிர்ணயம் முடிவடைந்த பின்பு தான், நான் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால், சரியல்ல. நான் பிரதிவாதியிடம் வாய்மொழியாக பலமுறை கேட்டேன். நான் பிரதிவாதியிடம் நேரில் சென்று கிரய ஆவணம் எழுதி கொடுக்கவேண்டும் என்று கேட்டேன். வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள ரமேஷ் என்பவர் என்னுடைய உறவினரா என்றால், இல்லை. மேற்படி ரமேஷ் என்பவர் என்னுடைய உறவினர் என்றால், சரியல்ல. நான் பிரதிவாதியிடம் வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தை பதிவு செய்ய பத்திர

அலுவலகம் செல்வதாகவும், பிரதிவாதியை பத்திர பதிவு அலுவலகம் தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரியல்ல. வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணம் பதிவு சட்டத்தின் கீழ் முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றும், பிரதிவாதிக்கு சரியாக காது கேட்காது என்பதால் அதை நான் சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டு வா.த.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ஆவணத்தை முறைகேடாக தயார் செய்து, தவறான ஆதாயம் பெறுவதற்கு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு, நான் முன்தொகையாக கொடுத்ததாக கூறப்படும் தொகை ரூ.5,00,000 எனது வீட்டில் வைத்திருந்ததில் இருந்து கொடுத்தேன். நான் ரியல் எஸ்டேம் தொழில் செய்து வருகிறேன். பிரதிவாதியின் தகப்பனாரும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார் என்றால், சரிதான். பிரதிவாதியின் தகப்பனாரும், நானும் நண்பர்கள் என்றால், சரியல்ல. நானும், பிரதிவாதியின் தகப்பனாரும் ரியல்எஸ்டேட் தொழில் நண்பர்கள் என்றும், அவ்வாறு நண்பர்களாக இருந்தபோது வெற்றுத்தாளில் பிரதிவாதியிடம் கையொப்பம் மட்டும் வாங்கினேன் என்றால், சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.